# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032

தொலைபேசி 044-22201337

மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in

இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண் 354/மா/2025

நாள் 30.03.2026

N. சேவியர் எட்கர் வாலஸ்
வேலூர் --- முறையீட்டு மனுதாரர்

ஆணையர்
வேலூர் மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

வேலூர்–632 007, காட்பாடி, பர்னீஷ்புரம், ஆசிரியர் காலனி விரிவு, மனை எண்.16 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. N.சேவியர் எட்கர் வாலஸ் என்பவரின் 15.09.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 16.09.2025 அன்று பெறப்பட்டு 354/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

வேலூர்–632 007, காட்பாடி, பர்னீஷ்புரம், ஆசிரியர் காலனி விரிவு, மனை எண்.16 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. N.சேவியர் எட்கர் வாலஸ் என்பவர் 15.09.2025 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

1) வேலூர் மாநகராட்சி, காட்பாடி, பர்னீஷ்புரம், ஆசிரியர் காலனி விரிவாக்கம், மனை எண்.16ல் அமைந்திருக்கும் வீட்டிற்கு 2013 ஆம் வருடம் முறையாக கட்டிட வரைபடம், உரிய கட்டணம் செலுத்தி கட்டிடம் கட்ட அனுமதி பெற்று வீடு கட்டியுள்ளேன். தங்கள் மேலான பார்வைக்கு வேலூர் மாநகராட்சி சார்பில் அளித்த கட்டிட வரைபட நகல் 1 ஆக, கட்டிட அனுமதி கடித நகல் 2 ஆகவும் இணைத்துள்ளேன்.

2) 2015–16 கணக்கீட்டு ஆண்டில் பிற்பாதியில் கட்டிடம் கட்டி முடிக்கப்பெற்று அதற்குரிய கட்டணங்கள் செலுத்தப்பெற்று சொத்துவரி விதிக்க அனுமதி பெற்று, 2015–16 பிற்பாதி ஆண்டு முதல் சொத்துவரி கட்டி வருகின்றேன். சொத்துவரி கட்ட அனுமதி வேலூர் மாநகராட்சி சார்பில் அளித்த கடித நகல் 3 ஆக, முதன்முதலில் கட்டிய சொத்துவரி நகல் 4 ஆகவும் இணைத்துள்ளேன்.

3) ஆசிரியர் காலனி விரிவாக்கம் 4 தெருக்களில் அடிப்படை வசதிகள் தேவை என்று கோரி 16.01.2024 அன்று வேலூர் மாநகராட்சி, தாரபடவேடு, மண்டல அலுவலகம், எண் 1 இன் மதிப்புமிகு உதவி ஆணையர் அவர்களுக்கும், அந்த மனு நகலை மதிப்புமிகு வார்டு எண் 4 மாமன்ற உறுப்பினர் அவர்களுக்கும் பதிவு அஞ்சல் வழியே அனுப்பினேன். அந்த மனு நகல் 5 ஆக இணைத்துள்ளேன்.

4) அந்த மனுவை பெற்ற நான்காவது வார்டு மாமன்ற உறுப்பினரின் கணவர், 'இதற்கெதற்கு பதிவு அஞ்சல் – நேரிலேயே தெரிவித்து இருக்கலாமே' என தொலைபேசி மூலம் கடிந்து கொண்டு நேரில் பார்வையிடுவதாக கூறி நேரில் பார்வையிட்டு, இது எனது வார்டு அல்ல இருப்பினும் கோரிய கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதாக கூறிச் சென்றார். நாட்கள் கடந்தது கோரிக்கைகள் நிறைவேறவில்லை. ஆகவே எங்கள் பகுதி வார்டு எண் உட்பட, மனுவைப் பற்றிய மூன்று தகவல்கள் ஆக மொத்தம் நான்கு தகவல்கள் தகவல் பெறும் உரிமைச் சட்டம் கீழ் 19.02.2024 அன்று தகவல் கோரி கிடைக்காது முதல் மேல்முறையீடு மாண்புமிகு வேலூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரி கிடைக்காது மாண்புமிகு தகவல் ஆணையரிடம் தகவல் பெற்றுத்தரக் கோரி இரண்டாம் மேல்முறையீட்டு மனு அளித்து மனு தகவல் ஆணையத்தில் SA 9543/2024 என எண்ணிடப்பட்டு விசாரணைக்கு வரிசையில் நிலுவையில் உள்ளது. தகவல் கோரிய மனு நகல் 6 ஆக இணைத்துள்ளேன். ஆனாலும் எங்கள் நான்கு தெருவில் மூன்று தெருவிற்கு சாலை வசதி மட்டும் செய்யப்பட்டுள்ளது. நான் கோரிய வேறு எந்த வசதியும் இன்று வரை மாநகராட்சியால் செய்து தரப்படவில்லை.

5) அரசுக்கு செலுத்த வேண்டிய வரிகளை முன்கூட்டியே செலுத்தும் வழக்கம் உள்ளவன் நான் இதுவரை வரிகளை காலம் கடந்து செலுத்தி அபராதத் தொகை கட்டியது இல்லை. ஆகவே 30.04.2024 அன்று 2024–25 ஆம் வருடத்திற்கான சொத்துவரி கட்டி இரசீது பெற்று உள்ளேன். அந்த இரசீது நகல் 7 ஆக இணைத்துள்ளேன்.

6) 21.12.2024 முதல் 03.02.2025 வரை பல தடவைகள் மாநகராட்சி அலுவலகத்திலிருந்து 2024–25க்கு வரி கட்டவில்லை என அலைபேசி அழைப்புகள் வந்தது. அழைத்தவர்கள் வரி உயர்வு செய்துள்ளதாக தெரிவிக்கவில்லை. அவர்களிடம் வரி கட்டியாயிற்று என கூறி விளக்கவே பெரும்பாடயிற்று. ஆகவே இது குறித்து மதிப்புமிகு மூன்றாவது மாமன்ற உறுப்பினர் திரு. இரவிகுமார் அவர்களிடம் வினவியபோது 01.10.2024 முதல் வரிஉயர்வு தமிழ்நாடு முழுக்க அரசு உயர்த்தியுள்ளதாக தெரிவித்தார். வரி உயர்வு பற்றி சமூக ஊடகங்கள் வாயிலாகவும் அறிந்தேன்.

7) ஆகவே அரசு உயர்த்தியுள்ள வரியை கட்டிவிடலாம் என வேலூர் மாநகராட்சி மண்டல அலுவலகம் எண் 1 க்கு 03.02.2025 இல் சென்ற போது பணம் பெறும் அம்மணி ரூ.12,000/– வருகிறது என்றார். ஏன் என வினவியதற்கு பக்கத்தில் உள்ள மதிப்புமிகு அலுவலரை வினவ பணித்தார். அவரிடம் வினவியதற்கு அவர் வார்டு எது எனக் கேட்டு திரு சௌந்தர் ராஜன் என்பவர் அலைபேசி எண்ணைத் தந்து அவர் தங்கள் வார்டில் எங்கவாது இருப்பார் அவரை அழைத்துச் சென்று எனது வீட்டை படம் பிடித்து வர கூறினார். நானும் அவ்வாறே மதிப்புமிகு திரு. சௌந்தர் ராஜனைத் தொடர்பு கொண்டு அழைத்தும் அவர் எனது வீட்டிற்கு ஒரு பெண்மணி அம்மையாருடன் கையில் நூற்றுக்கும் மேற்பட்ட கேட்பு அறிவிப்புகள் வைத்துக் கொண்டு வந்தார். அப்போது தான் முதலாவதாக என்னிடம் கேட்பு அறிவிப்பு தந்தார். அதில் 2024–25க்கு சொத்துவரியாக ரூ.9,608/– கட்ட வேண்டும் என்று இருந்தது. அவரிடம் நான் ஏற்கனவே கட்டிய வரியை கழிக்கவில்லையே எனக் கேட்டு, அதற்கு அவரும் நான் கட்டிய வரி இரசீதை பார்வையிடும்போதே, அக்கேட்பு அறிவிப்பில் வணிகப்பயன்பாடு என்றிருந்ததை சுட்டிக் காட்டியதும் அவசர அவசரமாக அந்த கேட்பு அறிவிப்பை திரும்ப பெற்றுக் கொண்டு, 'இனி உங்களுக்கு அலைபேசி அழைப்பு வராது ஏதோ தவறு நேர்ந்து விட்டது. மின்வாரியத்திலிருந்து வணிகப்பயன்பாடு பட்டியல் வந்து உள்ளதாகவும் அதன்படியே வரி உயர்வு விதித்ததாகவும், அரசு உயர்த்திய 6% வரி உயர்வு மட்டும் நான் போய் சரி செய்தவுடன் தாங்கள் கட்டவேண்டி வரும்' என கூறி சென்றார். இருப்பினும் அந்த கேட்பு அறிவிப்பை எனது அலைபேசி மூலம் படம் எடுத்துள்ளேன். அதன் நகல் 8 ஆக இணைத்துள்ளேன். இந்த கேட்பு அறிவிப்பை திரு. சௌந்தர் ராஜன் திரும்ப பெற்றுக் கொண்டார். என்னிடம் அசல் இல்லை. இதுபோல நிறைய பேர்களுக்கு கேட்பு

அறிவிப்புகள் உள்ளதாகவும் அவற்றை வழங்க உள்ளதாகவும் என்னிடம் திரு. சௌந்தர் ராஜன் 03.02.2025 அன்று கூறினார்.

8) ஆனாலும் திரும்பவும் அலைபேசி அழைப்புகள் மாநகராட்சி அலுவலகத்திலிருந்து தொடர்ந்த வரவே மதிப்புமிகு சௌந்தர் ராஜனை தொடர்பு கொண்டு கேட்டதற்கு, 'அவர்களிடம் ஒன்றும் பேச வேண்டாம் நான் சரி செய்து விடுவேன் அதன்பின் தாங்கள் பழைய வரியுடன் 6% மட்டுமே கூடுதலாக கட்ட வேண்டி வரும்' என்றும் கூறினார். அலைபேசி தொடர்புகள் அனைத்தும் பதிவு செய்துள்ளேன். மாண்புமிகு சமூகம் கோரினால் நேரில் சமர்ப்பிக்க தயாராக உள்ளேன் என மிகவும் பணிந்து தெரிவிக்கின்றேன். மதிப்புமிகு சௌந்தர் ராஜன் இப்பிரச்சனையை சரி செய்து விடுவார் என்ற நம்பிக்கையோடு இருந்தேன். எனது பக்கத்து வீட்டு உரிமையாளர்கள் இருவர் அரசு அறிவித்த 6% வரி உயர்வை கட்டியுள்ள இரசீதையும் பார்வையிட்டுள்ளேன்.

9) இருப்பினும் தொடர்ந்து அலைபேசி அழைப்புகள் வரவே சந்தேகமடைந்து 24.03.2025 அன்று தகவல் சட்டம் கீழ் மதிப்புமிகு எண் 1 மண்டல அலுவலக உதவி ஆணையர் வசம் ஆறு தகவல்கள் கோரினேன். தகவல் கோரிய மனு நகல் 9 நகல் இணைத்துள்ளேன்.

10) அரசு அறிவித்துள்ள கூடுதல் சொத்துவரிக்கான அரசாணை எண் 113/2024 நாள் 05.09.2024 அரசாணையும் பெற்றுள்ளேன். அதன் மூன்று பக்க நகல் தங்கள் மேலான பார்வைக்காக இத்துடன் 10 ஆக இணைத்துள்ளேன்.

11) 22.04.2025 அன்று 2025–26 ஆண்டிற்கான சொத்துவரியுடன் 01.10.2024 முதல் கூடிய சொத்துவரியையும் கட்டிவிடலாம் என மண்டல அலுவலகம் எண் 1க்கு சென்ற போது திரு. சௌந்தர் ராஜன் என்னைப் பார்த்து தங்கள் வீடு வணிகப்பயன்பாட்டிலிருந்து குடியிருப்பு பயன்பாட்டிற்கு மாற்றியாயிற்று எனக் கூறினார். நானும் பிரச்சனை முடிந்தது என சந்தோசத்துடன் பணம் பெறும் மதிப்புமிகு அம்மையாரிடம் வந்தபோது அவர் ரூ.9608/– கட்ட வேண்டும் எனக் கூறினார். ஏன் என வினவியதற்கு பயன்பாடு வகை தான் மாற்றப்பட்டுள்ளது கட்ட வேண்டிய தொகை அதே தான் என்று திரு சௌந்தர் ராஜன் கூறினார். வணிகப்பயன்பாட்டிற்கும் குடியிருப்பு பயன்பாட்டிற்கும் ஒரே கட்டணமா என வினவிய போது அது அப்படித்தான் என முடித்துக் கொண்டார். அப்போதுதான் புரிந்தது இந்த தொந்தரவு வேண்டுமென்றே உருவாக்கப்பட்ட தொந்தரவு என்று. இதேபோல் பலருக்கு இப்படி தொந்தரவு உருவாக்கப்பட்டு கணிசமான கையூட்டு பெற்றுக் கொண்டு சொத்து வரி குறைக்கப்பட்டுள்ளதாக அதன்பிறகு விசாரித்து அறிந்தேன்.

12) ஆகவே அன்றே 22.04.2025 மதிப்புமிகு மண்டல உதவி ஆணையர் அவர்களுக்கு இந்த விவரங்களை தெளிவுபடுத்தி வேண்டுமென்றே கூட்டிய வரியை வரி குறைப்பு செய்திடக் கோரியும், அரசு அரசாணை 113 நாள் 05.09.2024 இல் கூட்டியுள்ள வரி உயர்வை கட்ட தயாராக இருப்பதாக தெரிவித்தும் மனு அளித்தேன். மனு நகல் 11 ஆக இணைத்துள்ளேன். 24.03.2025 அன்று தகவல் கோரிய மனுவிற்கு மதிப்புமிகு உதவி ஆணையர் தகவல் தராததால், 29.04.2025 அன்று முதல் மேல்முறையீட்டு அலுவலரான மாண்புமிகு வேலூர் மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு முதல் மேல்முறையீட்டு தகவல் சட்டப்படி தகவல் கோரினேன்.

13) அதன்பிறகு பொய்யான தகவல் மதிப்புமிகு மண்டல உதவி ஆணையரிடத்திலிருந்து 05.05.2025 அன்று பெற்றேன். அந்த தகவல் நகல் தங்கள் மேலான பார்வைக்கு 12 ஆக இணைத்துள்ளேன். ஆகவே அந்த தகவல் பொய், உண்மையான தகவல் பெற்றுத் தரக் கோரி 10.05.2025 அன்று மாண்புமிகு மாநகராட்சி ஆணையரிடம் தகவல் சட்டப்படி மீண்டும் முதல் மேல்முறையீட்டு தகவல் சட்டம் அளிக்கும் காலம் வரை தகவல் தராததால் 10.08.2025 அன்று மாண்பமை தகவல் ஆணையத்தில் அளித்த இராண்டாம் மேல்முறையீடு

மனு நிலுவையில் உள்ளது. 10.08.2025 மாண்பமை ஆணையத்திற்கு அனுப்பிய மனுவின் நகலை மதிப்புமிகு உதவி ஆணையருக்கும் அனுப்பினேன். அந்த மனுவின் நகல் தங்கள் பார்வைக்கு 13 ஆக இணைத்துள்ளேன். இன்றுவரை அந்த மனு குறித்த தகவல் எதுவுமே மதிப்பிற்குரிய உதவி ஆணையர், மாண்புமிகு ஆணையர் இருவரும் தரவில்லை.

14) 03.02.2025 அன்று திரு. சௌந்தர் ராஜன் நேரிலும், மதிப்புமிகு உதவி ஆணையர் 05.05.2025 அன்று அளித்த தகவலிலும் மின்வாரியத்திலிருந்து வந்த பட்டியல்படி வரி உயர்வு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த காரணத்தால் 10.05.2025 அன்று வேலூர் மின்பகிர்மான கழகத்தில் தகவல் கோரி 09.06.2025 அன்று அப்படி பட்டியல் எதுவும் அனுப்பவில்லை என்று தகவலை பெற்றேன். தகவல் கோரிய மனு, பெற்ற தகவல் என இரண்டையும் முன்னும் பின்னுமாக ஒரே தாளில் பதிவு செய்து தங்களுக்காக 14 ஆக தந்துள்ளேன்.

15) மின்வாரியத்திலிருந்து பட்டியல் வந்தது பொய் என நிரூபிக்கபட்டமையால் மண்டல உதவி ஆணையரிடத்திலிருந்து 05.05.2025 பெற்ற தகவலில் உள்ள மற்ற விவரங்களும் பொய் என நிரூபிக்க 21.06.2025 அன்று தகவல் சட்ட உதவியினால் மண்டல உதவி ஆணையரிடம் நான்கு தகவல்கள் கோரி அவர் தகவல் தராது 28.07.2025 முதல் மேல் முறையீட்டு அலுவலரான மாண்புமிகு மாநகராட்சி ஆணையரிடம் முதல் மேல்முறையீடு செய்து இன்றுவரை மதிப்புமிகு அவரும் எந்த தகவலும் தரவில்லை. 21.06.2025 அன்று தகவல் கோரிய மனு நகல் 15 ஆக இணைத்துள்ளேன். 28.07.2025 அன்று மாண்புமிகு வேலூர் மாநகராட்சி ஆணையரிடம் தகவல் சட்டப்படி முதல் மேல்முறையீட்டு தகவல் கோரிய மனு நகல் தங்கள் பார்வைக்காக 16 ஆக இணைத்துள்ளேன்.

16) 22.04.2025 அன்று மண்டல உதவி ஆணையர் அவர்களுக்கு அளித்த மனு குறித்து எந்த பதிலுமில்லா காரணத்தால் 24.05.2025 இல் அனைத்து விவரங்களையும் பதிவு செய்து மனுவாக மாண்புமிகு மாநகராட்சி ஆணையர், மாண்புமிகு மேயர் ஆகிய இருவருக்கும், அம்மனு நகல் மதிப்புமிகு மண்டல உதவி ஆணையர் ஆக 3 பெருந்தகையோர்க்கும் பதிவு அஞ்சல் வழியே அனுப்பினேன். அந்த மனு நகல் 17 ஆக இணைத்துள்ளேன்.

17) இவ்வளவு மனுக்கள் அனுப்பியும் மண்டல உதவி ஆணையர், மாண்புமிகு ஆணையர் மற்றும் மாண்புமிகு மேயர் ஆகிய பெருமக்கள் அமைதி காத்தமையால் எனது மனுக்கள் பற்றி தெரிந்து கொள்ள தகவல் சட்ட உதவியை நாடி 28.06.2025 அன்று மனு குறித்த 10 தகவல்கள் கோரி தகவல் சட்டப்படி மாநகராட்சி தலைமை அலுவலக பொது தகவல் அலுவலரிடம் தகவல் கோரி தகவல் கிடைக்காது. மாண்புமிகு மாநகராட்சி ஆணையர் அவர்களிடம் 28.07.2025 அன்று முதல் மேல்முறையீட்டு தகவல் சட்டம் விளம்பும் காலம் வரை அவரும் தகவல் எதுவும் இன்று வரை தரவில்லை. 28.06.2025 தகவல் கோரிய மனு தங்கள் மேலான பார்வைக்கு 18 ஆக இணைத்துள்ளேன். 28.07.2025 அன்று மாண்பமை வேலூர் மாநகராட்சி ஆணையர் அவர்களிடம் தகவல் சட்டப்படி முதல் மேல்முறையிட்ட மனு தங்களின் மேலான பார்வைக்காக 19 ஆக இத்துடன் இணைத்துள்ளேன்.

18) பொய்யான காரணம் கூறி கேட்பு அறிவிப்பு அளித்து மக்களிடம் பயத்தை உருவாக்கி கணிசமான தொகை கையூட்டாக பெற்றுக்கொண்டு வரி குறைப்பு செய்திடும் மண்டல வருவாய் உதவியாளர் திரு. சௌந்தர் ராஜனும் அவருக்கு உதவியாக செயல்படும் மண்டல உதவி ஆணையர் மற்றும் மாண்புமிகு மாநகராட்சி ஆணையர், மாண்புமிகு மாநகராட்சி மேயர் ஆகியோர் மீது தகுந்த நடவடிக்கை எடுத்திட மிகவும் பணிந்து வேண்டுகிறேன். வேலூர் மாநகராட்சி நிர்வாகத்தின் செயல்முறைகள் சுதந்திர இந்திய திருநாட்டில் 2025 இல் இருக்கின்றோமோ அல்லது 1945 இல் அடிமை இந்தியாவில் வசிக்கின்றோமா என்ற சந்தேகத்தை உருவாக்கி, மிகவும் மன வேதனைகளுக்கும், மன உளைச்சலுக்கும் ஆளாக்கியுள்ளனர்.

19) மேலும் மேதகு சமூகம் மாநகராட்சி சார்பில் அளிக்கப்பட்ட கேட்பு அறிவிப்பு நகல்கள், அறிவிப்பில் உள்ளவர்கள் 2024–25 ஆண்டுக்கு கட்டிய வரி, கேட்பு அறிவிப்பில் கோரிய வரிக்கும் கட்டிய வரிக்கும் இடையேயான வரிகுறைவுக்கான காரணம் பற்றி விசாரிக்க உரிய புலனாய்வு அமைப்பிற்கு உத்தரவிடும்பட்சத்தில் மிகப் பெரிய ஊழல் வெளிவருவது திண்ணம்.

20) ஆகவே மதிப்புமிகு வேலூர் மாநகராட்சி வருவாய் உதவியாளர், அவருக்கு உடந்தையாக செயல்படும் மதிப்புமிகு வேலூர் மாநகராட்சி மண்டல அலுவலக உதவி ஆணையர், மாண்புமிகு வேலூர் மாநகராட்சி ஆணையர் மற்றும் மாண்புமிகு மாநகராட்சி மேயர் ஆகியோர் உரிய விசாரணை செய்து எனக்கு உரிய நீதி வழங்கி உரிய பரிகாரம் கிட்ட மிகவும் பணிந்து வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

21) மேலும் அரசு அரசாணை மூலம் உயர்த்திய வரியை கட்ட எனக்கு அனுமதியளிக்கவும், பொய்யான காரணம் கூறி அறிவித்த வரி உயர்வை இரத்து செய்யவும் மிகவும் பணிந்து வேண்டி கேட்டுக் கொள்கிறேன்."

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம் முறைமன்ற நடுவ 23.10.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் வேலூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. எதிர்மனுதாரரான வேலூர் மாநகராட்சி ஆணையாளர் தனது கடிதம் ந.க. எண் அ1/848/2025/ம–1 நாள் 13.11.2025–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார். அதில்–

"வேலூர் மாநகராட்சி மண்டலம்–1–க்குட்பட்ட காட்பாடி பர்னீஸ்புரம் ஆசிரியர் காலனி விரிவாக்கம் மனை எண் 16–ல் அமைந்திருக்கும் கட்டிடத்திற்கு 2013–ஆம் ஆண்டு கட்டிட அனுமதி பெறப்பட்டு 2015–2016 ஆண்டு முதல் சொத்துவரி உயர்த்தப்பட்டது மற்றும் அடிப்படை வசதிகள் செய்து தர கோரி உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை அவர்களுக்கு திரு. சேவியர் எட்கர் வாலஸ் என்பவர் தெரிவித்ததன் அடிப்படையில் கீழ்க்கண்ட தகவல்கள் முறைமன்ற நடுவத்திற்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

வேலூர் மாநகராட்சி கட்டிட அனுமதி ஆணையின்படி திரு. சேவியர் எட்கர் வாலஸ் என்பவர் தரைதளம்–65.23 சதுர மீட்டர், முதல் தளம்–65.23 சதுர மீட்டர், திறவெளி–83.42 சதுர மீட்டர் மொத்த பரப்பளவு 148.65 சதுர மீட்டர், அளவிற்கு மாநகராட்சியில் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் தரைதளத்திற்குண்டான அளவினை அளவீடு செய்து சொத்துவரி விதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டது. மீதமுள்ள முதல்தளம் மற்றும் திறவெளி மனைக்கு சொத்துவரி மற்றும் காலிமனை வரி விதிப்பு நிர்ணயம் செய்வது நிலுவையில் உள்ளது.

இந்நிலையில் வேலூர் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சொத்து வரி / காலிமனை வரி விதிக்காமல் விடுப்பட்ட கட்டிடங்கள் மற்றும் குறைவாக வரிவிதிப்பு செய்யப்பட்ட கட்டிடங்களுக்கு சொத்துவரி உயர்வு திருத்தம் நிர்ணயம் செய்வது தொடர்பாக தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 பிரிவு 80, 81, 82, 83, 89, 90, 91, 97 & 100 விதிகள், 2023 விதி எண்கள் 255, 256, 257, 258, 259, 200, 262, 264, 265, 266 & 268 சிறப்பு அறிக்கை சொத்துவரி புதிய வரிவிதிப்பு அல்லது திருத்தத்தை குறித்து மாநகராட்சி பகுதிகளில் உள்ள ஒவ்வொரு வரி செலுத்துபவர்களுக்கும் சார்பு செய்யப்பட்டுள்ளது. சொத்துவரி உயர்வு தொடர்பாக தினசரி நாளிதழ்களில் விளம்பரம், உள்ளூர் தொலைகாட்சியில் விளம்பரம் மற்றும் ஆட்டோ மூலமாக வேலூர் மாநகராட்சி முழுவதும் அனைத்து பொதுமக்களுக்கும் தெரிவிக்கும் வகையில் விளம்பரங்கள் செய்யப்பட்டது. இந்நிலையில் மாநகராட்சி பகுதிகளில் விதிக்கப்பட்டிருக்கும் சொத்துவரி குடியிருப்பு / வணிக பயன்பாட்டு வரி நிர்ணயம் செய்வது

தொடர்பாக தமிழ்நாடு மின்சார வாரியத்தில் குடியிருப்புதாரர்கள் மின் இணைப்பு பெறப்பட்ட தன்மை குறித்து (குடியிருப்பு / வணிகம்) ஒத்திசைவு மற்றும் நேரடி ஆய்வு மேற்கொண்டு சொத்துவரி நிர்ணயம் செய்ய கேட்டு பெறப்பட்டது.

இந்நிலையில் சம்பந்தப்பட்ட ஆசிரியர் காலனி தெருவில் 16 கதவிலக்கம் உள்ள திரு. சேவியர் எட்கர் வாலஸ் என்பவரின் சொத்துக்கு விதித்திருக்கும் வரியானது 01.04.2024 ஆரம்பிக்கும் அரை வருடத்திலிருந்து பின்னும் நோட்டீஸ் பிறப்பிக்கப்படுகிற வரையில் சொத்துவரி தொகையாக நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது என்று / தொகை குறிப்பிட்டிருக்கும் காரணங்களுக்காக அதிகபடுத்த பட்டிருக்கிறது என்று அறியவும், நிர்ணயம் செய்யப்பட்டிருக்கும் வரிவிஷயமாய் அதிருப்தி ஏற்பட்டால் இந்த நோட்டீஸ் சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது / அறுபது தினங்களுக்குள்ளாக நீங்கள் நிர்வாக அதிகாரியிடத்தில் புனர் விசாரணை மனு கொடுத்துக் கொள்ளலாம். வரி விதித்திருப்பதை பற்றி முறையீடாவது, ஆட்சேபனையாவது மேற்படி முப்பது / அறுபது தினங்களுக்குள் செய்து கொள்ளப்படாதப்பட்சத்தில் வரி விதித்திருப்பது முடிவானதாகும் என சம்பந்தப்பட்ட நபருக்கு சிறப்பு அறிக்கை சார்பு செய்யப்பட்டுள்ளது. அன்னாரிடமிருந்து மேற்படி முப்பது / அறுபது தினங்களுக்குள் வரி விதித்திருப்பதை பற்றி முறையீடும் எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கப்படவில்லை.

மேலும், அரசாணை (MS) எண் 52 மற்றும் 53 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA-IV) துறை (சொத்துவரி மறு சீராய்வு) நாள் 30.03.2022, அரசாணை (MS) எண் 113 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA-IV) துறை (சொத்துவரி மறு சீராய்வு திருத்தம்) நாள் 05.09.2024 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிகையின்படி மாநகராட்சி பகுதிகளில் 01.04.2022 முதல் சொத்துவரி மறுசீராய்வுக்கு பின் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்கள் அளவீடு குறைவாக உள்ள (Under Assessed) உள்ள இனங்களுக்கு சொத்துவரி உயர்வு செய்தல் தெளிவுரை வழங்கியதன் அடிப்படையில் , 2022–2023–ஆம் ஆண்டு முதல் அரையாண்டிலிருந்து 01.04.2022 முதல் மண்டலம் மதிப்புகள் திருத்தி நிர்ணயம் செய்து புதிய சொத்துவரி / காலிமனை வரிவிதிப்பு செய்ய பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டதின் அடிப்படையில் கட்டிடங்களின் பரப்பளவு, கட்டிடத்தின் தன்மை வயது, பயன்பாடு, கட்டிடம் அமைந்துள்ள மண்டலம் மற்றும் காலிமனைகளின் பரப்பளவு ஆகியவற்றின் அடிப்படையில் எந்த ஒரு கட்டிடமும் / காலிமனையும் விடுப்படாமல் சொத்துவரி / காலிமனை வரிவிதிப்புகள் சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள வழங்கப்பட்டதின்படியும், மாநகராட்சிகளில் வருவாயினை பெருக்கும் வகையில் விடுப்பட்ட கட்டிடங்கள் (Un Assessed Building) அளவீடு குறைவாக கணக்கீடப்பட்டு வரிவிதிப்பு செய்யப்பட்ட கட்டிடங்கள் (Under Assessed Building) மற்றும் பயன்பாடு தவறுதலாக வரிவிதிப்பு செய்யப்பட்ட / பயன்பாடு மாற்றப்பட்ட கட்டிடங்கள் (Usage Conversion) கண்டறியப்பட்டு உரிய திருத்தம் மேற்கொண்டு கேட்பினை உயர்வு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆணை பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையிலும் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் குடியிருப்புதாரர்கள் மின் இணைப்பு பெறப்பட்ட தன்மை குறித்து (குடியிருப்பு / வணிகம்) அறிக்கை பெறப்பட்டதின் அடிப்படையில் சொத்துவரி தன்மை உயர்வு செய்யப்பட்டது. மேலும் மின்வாரியத்திலிருந்து பெறப்பட்ட பட்டியலின்படி சம்பந்தப்பட்ட குடியிருப்பு தரைதளம் 960 சதுரடியில் உள்ள குடியிருப்பு தன்மையாக கருதி சொத்துவரி உயர்த்தப்பட்டது. மேலும் வேலூர் மாநகராட்சி கட்டிட அனுமதி பெறப்பட்டதில் தரைதளம் 65.22 சதுர மீட்டர், முதல் தளம் 65.23 சதுர மீட்டர், திறவெளி 83.42 சதுர மீட்டர் அளவீட்டில் கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ளது. ஏற்கனவே தரைதளத்திற்கு மட்டும் சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள முதல் தளம் மற்றும் திறவெளி இடத்திற்கு சொத்துவரி மற்றும் காலிமனைவரி விதிப்பு செய்வது தொடர்பாக நிலுவையில் இருந்து வருகிறது. எனவே மேற்கண்டுள்ள

படிக்கப்பட்ட அரசாணைகள் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கையின்படி சொத்துவரி உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மற்றும் புகார்கள் மூலம் கோரப்பட்ட தகவல்கள் சம்பந்தப்பட்ட நபருக்கு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள முதல் தளம் காலியாக உள்ள திறவெளி மனைக்கும் வரி நிர்ணயம் செய்யப்பட வேண்டும். அன்னாரது குடியிருப்பிற்கு மிகையாக சொத்துவரி உயர்வு ஏதும் மாநகராட்சி மூலம் செய்யப்படவில்லை என்பது தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

வேலூர் மாநகராட்சி மண்டலம்–1–க்குட்பட்ட காட்பாடி பர்னீஸ்புரம் ஆசிரியர் காலனி விரிவாக்கம் மனை பிரிவு பகுதிகளில் அடிப்படை வசதிகளான தார் சாலை, தெருவிளக்குகள் மற்றும் குடிநீர் வசதிகள் செய்து முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. கால்வாய் அமைக்கும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து அரசின் அனுமதி பெற கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அரசின் அனுமதி பெறப்பட்டு கால்வாய் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கையில் உள்ளது என்பதை மாண்பமை முறைமன்ற நடுவத்திற்கு பணிந்து சமர்ப்பித்துக் கொள்ளப்படுகிறது.'' எனத் தெரிவித்துள்ளார்.

4. இந்நிலையில் மனுதாரர் தன்னுடைய 16.02.2025 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

''நான் 15.09.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களிடம் வேலூர் மாநகராட்சி சொத்து வரி மற்றும் தண்ணீர் வரி குறித்து படிவம் 1 இன் மூலம் இரு குற்றச்சாட்டுகள் தேவையான சான்றாவணங்களுடன் அளித்து, மாண்புமிகு நடுவர் அவர்களும் அக்குற்றச்சாட்டுகளை 353/மா/2025 மற்றும் 354/மா/2025 என எண்ணிடப்பட்டு அக்குற்றச்சாட்டுகளை வழக்காக பதிவு செய்துள்ளார்கள்.

இந்நிலையில் 2024–25, 2025–26 ஆண்டுகளுக்கான சொத்துவரி மற்றும் தண்ணீர் வரி அபராதத்துடன் கட்ட அறிவுறுத்தி 14.02.2026 அன்று வேலூர் மாநகராட்சியிலிருந்து அறிவிப்பு அளித்தார்கள். ஏற்கனவே மாண்புமிகு முறைமன்ற நடுவத்திடம் புகாரளித்து வழக்கு நிலுவையில் உள்ளதைக்கூறி அவ்வறிவிப்பை வாங்க மறுத்துள்ளேன். ஆனாலும், அந்த அறிவிப்பை எனது அலைபேசியில் பதிவு செய்துள்ளேன். அதில் 2024–25 வருடத்திற்கு காலதாமதகமாக கட்டப்போவதால் அபராதம் விதித்துள்ளனர். அந்த பதிவு செய்த அறிவிப்பின் நகல் இத்துடன் இணைத்துள்ளேன்.

நான் முன்கூட்டியே வரி கட்ட முயற்சிக்கும் போது குடியிருப்பு பயன்பாட்டை வணிகப் பயன்பாடாக மாற்றி கூடுதல் வரி விதித்து பிரச்சனையை உருவாக்கியது வேலூர் மாநகராட்சியே, ஆகவே தான், படிப்படியாக மண்டல துணை ஆணையர், ஆணையர், மேயர் ஆகிய பெருமக்களிடம் முறையீட்டு பயனின்றி மாண்புமிகு முறைமன்ற நடுவத்திடம் முறையீட்டு மாண்பமை அவர்களும் அதனை வழக்காக பதிவு செய்து அந்த இரு வழக்குகளும் நிலுவையில் உள்ள காரணத்தால் அபராதமாக எந்த தொகையும் கட்டமுடியாது என்றும் மாண்பமை முறைமன்ற நடுவத்தின் முடிவு தெரியா நிலையில் எத்தொகையும் கட்ட வழிவகை இல்லை என்பதை இதன் மூலம் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

இந்த மனுவினை மேதகு தங்களுக்கும் இந்த மனுவின் பொருண்மை வேலூர் மாநகராட்சி மண்டல அலுவலகம் எண் 1 இன் உதவி ஆணையர் மற்றும் வேலூர் மாநகராட்சி ஆணையர் ஆகிய பெருமக்களுக்கும் பதிவு அஞ்சல் வழியே மிகவும் பணிந்து அனுப்பியுள்ளேன்.''

5. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 27.02.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 19.02.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6. மனுதாரர் 27.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''குற்றச்சாட்டின் விவரம் :–

வேலூர் மாநகராட்சி, காட்பாடி, பர்னீஷ்புரம், ஆசிரியர் காலனி விரிவாக்கம், மனை எண்.16ல் அமைந்திருக்கும் வீட்டிற்கு 2013–ஆம் வருடம் முறையாக கட்டிட வரைபடம் மற்றும் உரிய கட்டணம் செலுத்தி கட்டிடம் கட்ட அனுமதி பெற்று வீடு கட்டி, 2015–2016 பிற்பாதி ஆண்டு முதல் சொத்துவரி கட்டி வருகின்றேன்.

03.02.2025 அன்று சொத்துவரி கட்ட மாநகராட்சி அலுவலகத்திற்கு சென்ற போது ரூ.12,000/– கட்ட வேண்டும் என கூறினார்கள். ஆனால் அப்போது எனக்கு அளித்த கேட்பு அறிவிப்பில் 2024–2025க்கு சொத்துவரியாக ரூ.9,608/– கட்ட வேண்டும் என கூறினார்கள். இதைப்பற்றி கேட்டபோது தங்கள் வரிவிதிப்பு எண்ணாது மின்வாரியத்தின் பட்டியல்படி வணிகப்பயன்பாட்டில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. ஆனால் மின்வாரியத்திலிருந்து எவ்வித அறிக்கையும் அளிக்கவில்லை என தகவல் அளித்தார்கள். 2024–2025 ஆண்டிற்கான சொத்துவரி கட்ட சென்றபோது தங்கள் வரிவிதிப்பு எண்ணானது குடியிருப்பு பயன்பாட்டிற்கு மாற்றி விட்டதாக தெரிவித்தார்கள்.

ஆனால் எனது வீட்டிற்கு சொத்துவரியாக ரூ 9608/–கட்ட வேண்டும் என்று இன்று வரை தெரிவித்து வருகிறார்கள். வணிகபயன்பாட்டிற்கும், குடியிருப்பு பயன்பாட்டிற்கும் எவ்வாறு ஒரே விகிதத்தில் சொத்துவரி விதிக்க இயலும். எனவே, என்னுடைய வீட்டின் கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்யாத நிலையிலும் குடியிருப்பு பயன்பாட்டிற்கு மாற்றம் செய்யப்பட்ட நிலையிலும் வணிகபயன்பாட்டிற்கு விதிக்கப்பட்ட ரூ.9608/–ஐ ரத்து செய்யுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மின்வாரியத்திலிருந்து அளிக்கப்பட்டதாக தெரிவித்த பட்டியலின் நகல் எனக்கு வழங்கும்மாறும் குடியிருப்பு பயன்பாட்டு சொத்துவரி விகிதம் மற்றும் வணிகபயன்பாட்டு சொத்துவரி விகிதத்தையும் எனக்கு தெரிவிக்குமாறு வேலூர் மாநகராட்சி அவர்களுக்கு உத்தரவிடுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.''

7. எதிர்மனுதாரர் தரப்பில் வேலூர் மாநகராட்சி உதவி ஆணையர் 27.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''மனுதாரருக்கு கட்டிட அனுமதி ஆணையின்படி தரைதளம் – 65.23 சதுர மீட்டர், முதல் தளம் – 65.23 சதுர மீட்டர், திறவெளி – 83.42 சதுர மீட்டர், மொத்த பரப்பளவு 148.65 சதுர மீட்டர், அளவிற்கு மாநகராட்சியில் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் தரைதளத்திற்குண்டான அளவினை அளவீடு செய்து சொத்துவரி விதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டது.

மனுதாரரின்கட்டிடம் மின்வாரிய பட்டியலின்படி வணிகபயன்பாட்டிற்கான வரியாக உயர்வு செய்யப்பட்டது. மனுதாரரின் புகாரின்படி கள ஆய்வு செய்யப்பட்டதில் அது குடியிருப்பு பயன்பாடாக இருந்தது எனவும், அளவு கூடுதலாக உள்ளது எனவும் கண்டறியப்பட்டு, குடியிருப்பு உபயோகமாக மாற்றம் செய்யப்பட்டு கூடுதலான அளவிற்கும் சேர்த்து வரிவிதிப்பு செய்யப்பட்டது.

எனவே அரசாணைகள் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கையின்படி மனுதாரர் கட்டிடத்திற்கு சொத்து வரி விதிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

8. மனுதாரரின் மனுக்கள், வாக்குமூலம், எதிர்மனுதாரரான வேலூர் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவி ஆணையரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

வேலூர் மாநகராட்சி, காட்பாடி, பர்னீஷ்புரம், ஆசிரியர் காலனி விரிவாக்கம், மனை எண்.16ல் அமைந்திருக்கும் மனுதாரர் வீட்டிற்கு 2013–ஆம் வருடம் முறையாக கட்டிட வரைபடம் மற்றும் உரிய கட்டணம் செலுத்தி கட்டிடம் கட்ட அனுமதி பெற்று வீடு கட்டி, 2015–16 பிற்பாதி ஆண்டு முதல் சொத்துவரி கட்டப்படுகிறது என்பதும், மனுதாரர் சொத்துவரி கட்ட மாநகராட்சி அலுவலகத்திற்கு சென்ற போது ரூ.12,000/– கட்ட வேண்டும் தெரிவிக்கப்பட்டது என்பதும், அப்போது தனக்கு அளித்த கேட்பு அறிவிப்பில் 2024–2025க்கு சொத்துவரியாக ரூ.9,608/– கட்ட வேண்டும் என மாநகராட்சியால் தெரிவிக்கப்பட்டதைப் பற்றி கேட்டபோது தங்கள் வரிவிதிப்பு எண்ணானது மின்வாரியத்தின் பட்டியல்படி வணிகப்பயன்பாட்டில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது என்பதும், ஆனால் மின்வாரியத்திலிருந்து எவ்வித அறிக்கையும் அளிக்கவில்லை என தகவல் அளிக்கப்பட்டது என்பதும், 2024–2025 ஆண்டிற்கான சொத்துவரி கட்ட சென்றபோது தங்கள் வரிவிதிப்பு எண்ணானது குடியிருப்பு பயன்பாட்டிற்கு மாற்றி விட்டதாக தெரிவிக்கப்பட்டது என்பதும், ஆனால் தனது வீட்டிற்கு சொத்துவரியாக ரூ.9608/–கட்ட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது என்பதும், தன்னுடைய வீட்டின் கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்யாத நிலையிலும் மற்றும் குடியிருப்பு பயன்பாட்டிற்கு மாற்றம் செய்யப்பட்ட நிலையிலும் இருக்கும்போது, மேற்கண்ட வணிகபயன்பாட்டிற்கு விதிக்கப்பட்ட தொகையான ரூ.9608/–ஐ ரத்து செய்யுமாறும், மின்வாரியத்திலிருந்து அளிக்கப்பட்டதாக தெரிவித்த பட்டியலின் நகலினை தனக்கு வழங்குமாறும் குடியிருப்பு பயன்பாட்டு சொத்துவரி விகிதம் மற்றும் வணிகபயன்பாட்டு சொத்துவரி விகிதத்தையும் தனக்கு தெரிவிக்குமாறும் வேலூர் மாநகராட்சி அவர்களுக்கு உத்தரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனுக்கள் மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

வேலூர் மாநகராட்சி, காட்பாடி, பர்னீஷ்புரம், ஆசிரியர் காலனி விரிவாக்கம், மனை எண்.16ல் அமைந்திருக்கும் மனுதாரரின் வீட்டிற்கு கட்டிட அனுமதி ஆணையின்படி தரைதளம், முதல் தளம், திறவெளி ஆகியவற்றிக்கு மாநகராட்சியில் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளதில், தரைதளத்திற்குண்டான அளவினை மட்டும் அளவீடு செய்து மின்வாரிய பட்டியலின்படி மேற்கண்ட கட்டிடத்திற்கு வணிகபயன்பாட்டிற்கான வரியாக உயர்வு செய்யப்பட்டு சொத்துவரி விதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டது என்றும், மனுதாரரின் புகாரின்படி அக்கட்டிடம் கள ஆய்வு செய்யப்பட்டதில், குடியிருப்பு பயன்பாடாக இருந்தாலும் அக்கட்டிடத்தில் கூடுதல் அளவு உள்ளது கண்டறியப்பட்டதால், குடியிருப்பு உபயோகமாக மாற்றம் செய்யப்பட்டு கட்டிடத்தின் கூடுதலான அளவிற்கும் சேர்த்து சொத்து வரிவிதிப்பு செய்யப்பட்டது என்றும், இருப்பினும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறையின் அரசாணைகள் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் சுற்றறிக்கையின்படி மனுதாரர் கட்டிடத்திற்கு சொத்து வரி விதிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எதிர்மனுதாரரான வேலூர் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவி ஆணையாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், வேலூர் மாநகராட்சி, காட்பாடி, பர்னீஷ்புரம், ஆசிரியர் காலனி விரிவாக்கம், மனை எண்.16ல் அமைந்திருக்கும் மனுதாரரின் வீட்டிற்கான சொத்துவரி குறித்தான புகாரின் அடிப்படையில் கள ஆய்வு செய்ததில், அக்கட்டிடம் குடியிருப்பு பயன்பாடாக இருந்தாலும் அக்கட்டிடத்தில் கூடுதல் அளவு உள்ளதை கண்டறியப்பட்டதால், குடியிருப்பு உபயோகமாக மாற்றம் செய்யப்பட்டும், அக்கட்டிடத்தின் கூடுதலான அளவிற்கும் சேர்த்து சொத்து வரிவிதிப்பு செய்யப்பட்டது என்றும், இருப்பினும், அரசாணைகள் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் சுற்றறிக்கையின்படி மனுதாரர் கட்டிடத்திற்கு சொத்து வரி விதிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என வேலூர் மாநகராட்சி உதவி ஆணையாளரின் வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, மனுதாரரின் முன்னிலையில் மீண்டும் அளவீடு செய்து அதன் அடிப்படையில், மேற்கண்ட அரசாணைகள் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் சுற்றறிக்கையின்படி உரிய சட்டபூர்வமான நடவடிக்கை மூன்று மாத காலத்திற்குள் மேற்கொள்ளுமாறு வேலூர் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. N. சேவியர் எட்கர் வாலஸ்,
மனை எண் 16,
ஆசிரியர் காலனி விரிவு,
பர்னீஷ்புரம், காட்பாடி,
வேலூர்–632 007.

(2) ஆணையாளர்,
வேலூர் மாநகராட்சி,
வேலூர்–632 001.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

(4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ. / உதிரிகள்.

ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

7/4/26
செயலாளர்.

7/4/26